DEPOSITION OF WITNESS

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, KADALADI.

CC–28/2023

Prosecution witness – PW3

| | | | |
|---|---|---|---|
| Name | : திரு.முருகன் | Caste: | |
| Father's Name | : | Calling: | |
| Village | : | Religion: | |
| Taluk | : | Age: | |

(A1 to A3 present. A4 absent. Petiton filed and allowed)

30.06.2026 – 11.40 AM

முதல் விசாரணை:–

1. நான் களநீர்மங்களம் கிராமத்தில் குடியிருந்து கறிமூட்டம் போட்டு வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும் நான் வேலை செய்யும் இடத்திற்கு அருகிலேயே அவர்கள் குடியிருக்கிறார்கள். அ.சா.1 மற்றும் அ.சா.2 ஆகியோர்களை தெரியும். அவர்கள் பக்கத்து வீட்டுக்காரர்கள் தான். சுமார் 4 வருடங்களுக்கு முன்னதாக ஒரு நாள் இரவு 10,00 மணியளவில் எனது சின்னம்மா சாந்தாவும், நானும் கறிமூட்டம் போட்டு வேலை செய்து கொண்டிருந்த போது ஒரு அலறல் சத்தம் கேட்டது. அதனால் நானும், சின்னம்மாவும் அலறல் சத்தம் கேட்ட இடத்திற்கு சென்று பார்த்தபோது நவாஸ்கானுக்கு (அ.சா.2) வலது கால் முட்டிக்கு கீழே எலும்பு உடைந்து ரத்தமாக இருந்தது. அவர் கீழே படுத்து கிடந்தார். அவர் சுயநினைவுடன் இல்லை.

2. அப்போது அவரது மனைவியும் அருகில் தான் இருந்தார். அவரது பெயர் எனக்கு தெரியவில்லை. அவரிடம் என்ன நடந்தது என்று கேட்டேன். அவர் என்னிடம் வீட்டுப்பிரச்சனை சம்மந்தமாக அவரது கணவருக்கும் (அ.சா.2), அவருடைய தம்பிக்கும் இடையே சண்டை நடந்ததாகவும் அந்த சண்டையில் அவரது தம்பி கம்பால் அடித்ததில் அ.சா.2க்கு காலில் எலும்பு முறிவு ஏற்பட்டுவிட்டதாக தெரிவித்தார். அவரது தம்பி பெயர் எனக்கு தெரியவில்லை.

பிறகு அந்த இடத்திற்கு ஆம்புலன்ஸ் வந்தததும், அ.சா.2 ஐ அவரது மனைவி ஆம்புலன்சில் ஏற்றி மருத்துவமனைக்கு அழைத்து சென்றார். மறுநாள் இது சம்மந்தமாக சிக்கல் போலீசார் விசாரிக்க வந்தார்கள். நான் மேற்படி விவரங்களை அவரிடமும் கூறினேன். அன்றைய தினம் அ.சா.2 ஐ தாக்கியதாக அ.சா.2ன் மனைவி கூறிய நபர் தற்போது நீதிமன்றத்தில் ஆஜரில்லை. ஆனால் அவரை பார்த்தால் அடையாளம் தெரியும். ஆஜர் எதிரிகளில் அந்த நபர் இல்லை.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை: –</u>**

நான் சம்பவத்தை நேரில் பார்க்கவில்லை என்றால் சரிதான். நான் சென்ற போது அ.சா2 ஐ அடித்ததாக சொல்லப்படுகிற அ.சா.2ன் தம்பி அங்கு இல்லை என்றால் சரிதான். ஆஜர் எதிரிகளில் யாரும் சம்பவ இடத்தில் இல்லையென்றால் சரிதான். அலறல் சத்தம் கேட்டதாக சொல்லப்படுகிற இடம் நான் வேலை செய்த இடத்திலிருந்து எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் 100 மீட்டர் தொலைவு இருக்கும். அது இருட்டு சமயம் என்றால் சரிதான். என்னை போலீசார் வழக்கு சம்மந்தமாக விசாரிக்கவில்லை என்றால் சரிதான்.

ஒம்/–திருமதி.தங்ககார்த்திகா,
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர் (மு.கூ.பொ),
கடலாடி,